## பொள்ளாச்சி நகராட்சி
## 31.10.2021 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில்
## நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்
## தீர்மான எண்.3067–3105

3067) பொள்ளாச்சி நகராட்சியில் அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையம், சுத்திகரிப்பு நிலையம், மார்க்கெட் ரோடு நீர் உந்து நிலையம், நகராட்சி பகுதிகளில் உள்ள 9 உயர்மட்ட நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் 2 தரைமட்ட நீர் தேக்க தொட்டிகள் ஆகியவற்றில் சுய உதவிக்குழு மூலம் பணியாட்களை அமர்த்துதல் பணிக்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.4.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு விலைப்புள்ளிகள் கோர தனி அலுவலரின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே உள்ளூரில் விலைப்புள்ளி கோரி இப்பணியை உடனடியாக செய்து முடிக்க வேண்டியுள்ளதால் உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | பெயர் | விலைப்புள்ளி தொகை ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு |
|---|---|---|
| 1 | வெண்ணிலா மகளிர் சுய உதவிக்குழு,<br>24, தெற்கு வீதி,<br>ஆலாங்கடவு,<br>திவான்சாபுதூர் ஊராட்சி,<br>பொள்ளாச்சி. | ரூ.577.00/– |
| 2 | மலர் சுய உதவிக் குழு,<br>தாட்கோ காலனி,<br>ஆச்சிபட்டி,<br>ஆ.சங்கபாளையம்,<br>பொள்ளாச்சி. | ரூ.650.00/– |
| 3 | நிலா மகளிர் சுய உதவிக்குழு,<br>வார்டு.24 கண்ணப்பன் நகர்,<br>பொள்ளாச்சி. | ரூ.600.00/– |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாகவும் மற்ற விலைப்புள்ளிகளை விட குறைவாகவும் விலைப்புள்ளி அளித்துள்ள **வெண்ணிலா மகளிர் சுய உதவிக்குழு, பொள்ளாச்சி** அவர்களின் ரூ.577.00/– **என்ற** விலைப்புள்ளியை ஏற்கவும் மற்றும் பணி உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.577.00/– **என விலைப்புள்ளி அளித்துள்ள வெண்ணிலா மகளிர் சுய உதவிக்குழு, பொள்ளாச்சி** அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 4865/2021/இ1**

**3068)** பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் மின்கலத்தினால் இயங்கும் வாகனங்களை (BOV) ஆண்டு பராமரிப்பு செய்வதற்கு தேவையான உதிரிபாகங்கள் கொள்முதல் செய்தல் பணிக்கு ரூ.4.90 இலட்சம் மதிப்பீட்டிற்கு 22.10.2021 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1. | M/S.Taark Equipments Private Ltd, Pollachi. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.08% குறைவு. |
| 2. | M/S.Shasta Toolings and Solutions, Palladam. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.41% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.08% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் **M/S.Taark Equipments Private Ltd, Pollachi** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.08% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் **M/S.Taark Equipments Private Ltd, Pollachi** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 3664/2021/எச்2**

**3069)** பொள்ளாச்சி நகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை தமிழக அரசின் 100 நாள் சாதனையாக பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் பிரசுரம் செய்ய அனுமதித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.461/செ.மா.தொ.அ/2021 நாள்.05.08.2021–ல் கடிதம் வரப் பெற்றது. அதற்கிணங்க பொள்ளாச்சி நகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளை தினத்தந்தி நாளிதழ் மூலம் விளம்பரம் பிரசுரம் செய்யப்பட்டது. விளம்பரம் பிரசுரம் செய்த வகையில் தினத்தந்தி நாளிதழ் மூலமாக பட்டியல் தொகை கேட்டு ரூ.19740/–க்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்காண் விளம்பரம் பிரசுரம் செய்த தினத்தந்தி நாளிதழுக்கு பட்டியல்படி தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரையின்படி விளம்பரம் பிரசுரம் செய்த தினத்தந்தி நாளிதழுக்கு பட்டியல்படி தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**3070)** பொள்ளாச்சி நகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை தமிழக அரசின் 100 நாள் சாதனையாக பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் தினகரன் நாளிதழில் விளம்பரம் பிரசுரம் செய்ய அனுமதித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.415/செ.மா.தொ.அ/2021, நாள்.04.08.2021–ல் கடிதம் வரப் பெற்றது. அதற்கிணங்க பொள்ளாச்சி நகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளை தினகரன் நாளிதழ் மூலம் விளம்பரம் பிரசுரம் செய்யப்பட்டது. விளம்பரம் பிரசுரம் செய்த வகையில் தினகரன் நாளிதழ் மூலமாக பட்டியல் தொகை கேட்டு ரூ.21999/–க்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்காண் விளம்பரம் பிரசுரம்

| | |
|---|---|
| | செய்த தினகரன் நாளிதழுக்கு பட்டியல்படி தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரையின்படி விளம்பரம் பிரசுரம் செய்த தினகரன் நாளிதழுக்கு பட்டியல்படி தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம். |
| **3071)** | பொள்ளாச்சி நகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை கோவை தமிழ்முரசில் தொழில்மலர் சிறப்பு மலர் வெளியிட உள்ளதாகவும், தமிழக அரசின் நலத்திட்ட பணிகள், கொரோனா விழிப்புணர்வு செயல்பாடுகள், தடுப்பூசியின் அவசியம் பற்றிய தகவலுடன் வெளிவரும் இம்மலரில் கோவை மாவட்டத்தில் உள்ள மாநகராட்சி, நகராட்சியில் நலத்திட்டப் பணிகளை விளம்பரமாக தமிழ் முரசு நாளிதழில் விளம்பரம் பிரசுரம் செய்ய அனுமதித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.343/செ.மா.தொ.அ/2021 நாள்.20.07.2021–ல் கடிதம் வரப்பெற்றது. அதற்கிணங்க பொள்ளாச்சி நகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளை தமிழ் முரசு நாளிதழ் மூலம் விளம்பரம் பிரசுரம் செய்யப்பட்டது. விளம்பரம் பிரசுரம் செய்த வகையில் தமிழ் முரசு நாளிதழ் மூலமாக பட்டியல் தொகை கேட்டு ரூ.25,000/–க்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்காண் விளம்பரம் பிரசுரம் செய்த தமிழ் முரசு நாளிதழுக்கு பட்டியல்படி தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்க நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். |
| **3072)** | பொள்ளாச்சி நகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை மாலைமுரசு நாளிதழில் தொழில் மலர் 2021 புத்தகம் வெளியிடவுள்ளதாகவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் தொழில் துறையில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதன்மை, மாநிலமாக திகழ்வதற்கு பல்வேறு ஆக்கப்பூர்வமான பணிகளை செய்து வருகிறது எனவும், இம்மலரில் நலத்திட்டங்கள், தொழில் கொள்கைகள், கட்டுரைகள் இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. திட்டப்பணிகள் வளர்ச்சிப் பணிகளை விளம்பரமாக மாலைமுரசு நாளிதழில் விளம்பரம் பிரசுரம் செய்ய அனுமதித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.496/செ.மா.தொ.அ/2021 நாள்.16.08.2021ல் கடிதம் வரப் பெற்றது. அதற்கிணங்க பொள்ளாச்சி நகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளை மாலைமுரசு நாளிதழ் மூலம் விளம்பரம் பிரசுரம் செய்யப்பட்டது. விளம்பரம் பிரசுரம் செய்த வகையில் மாலைமுரசு நாளிதழ் மூலமாக பட்டியல் தொகை கேட்டு ரூ.9,900/–க்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்காண் விளம்பரம் பிரசுரம் செய்த மாலைமுரசு நாளிதழுக்கு பட்டியல்படி தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்க நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். |
| **3073)** | பொள்ளாச்சி நகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை விடுதலை நாழிதழில் தந்தை பெரியார் அவர்களால் 87 ஆண்டுகளக்கு முன்பு துவக்கி வைக்கப்பட்டு, தமிழ், தமிழர், தமிழ்நாடு இவற்றின் வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும், விழிப்புணர்வுக்கும், சமூகநீதிக்கும், மருத்துவத்திற்கும், பெண்கள் விடுதலைக்கும், மூடநம்பிக்கை ஒழிப்பிற்கும் தொண்டாற்றி, எண்ணற்ற சமூக அரசியல் மாற்றங்களுக்கு "விடுதலை" நாளிதழில் செயல்பட்டு வெற்றி பெற்ற வருவதாகவும், ஒவ்வொரு ஆண்டும் தந்தை பெரியார் பிறந்த நாளையொட்டி "விடுதலை" மலர் வெளியிட்டு வருவதற்கு விடுதலை நாளிதழில் விளம்பரம் பிரசுரம் செய்ய அனுமதித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.508/செ.மா.தொ.அ/2021 நாள்.17.08.2021–ல் கடிதம் |

வரப்பெற்றது. அதற்கிணங்க பொள்ளாச்சி நகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளை விடுதலை நாளிதழ் மூலம் விளம்பரம் பிரசுரம் செய்யப்பட்டது. விளம்பரம் பிரசுரம் செய்த வகையில் விடுதலை நாளிதழ் மூலமாக பட்டியல் தொகை கேட்டு ரூ.7,500/–க்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்காண் விளம்பரம் பிரசுரம் செய்த விடுதலை நாளிதழுக்கு பட்டியல்படி தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்க நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**3074)** பொள்ளாச்சி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மண்சாலைகளை தார்சாலைகளாக மேம்படுத்துதல், **Paver Block** சாலைகளை மேம்படுத்துதல் மற்றும் குளம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள **Auto Card** மூலம் வரைபடம் மேம்படுத்தி **Colour** நகல்கள், **Booklet** தொகுப்புகள் அடங்கிய விரிவான திட்ட அறிக்கை 3 நகல்கள் தயார் செய்தல் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.0.67 இலட்சம் ஆகம். இச்செலவினத்தை நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மேற்கொள்ளவும் 18.10.2021–ல் ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே உள்ளுரில் விலைப்புள்ளி கோரி இப்பணியை உடனடியாக செய்து முடிக்க வேண்டியுள்ளதால் உள்ளூர் விலைப்புள்ளிகள் 27.10.2021–ல் கோரப்பட்டது. விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | தியா சிவில் அசோசியேட், 97, அன்சாரி வீதி, அக்பர் காம்பளக்ஸ், பொள்ளாச்சி. | ரூ.67000/– |
| 2 | வேல்ஸ் அசோசியேட்ஸ், F–4. T.V.R காம்ப்ளக்ஸ், 12/10, S.R.M மில் வீதி, பொள்ளாச்சி. | ரூ.82000/– |
| 3 | மணி பில்டர்ஸ், 59, காயிதே மில்லத் வீதி, காந்திபுரம், சூளேஸ்வரன்பட்டி, பொள்ளாச்சி. | ரூ.78000/– |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாகவும் மற்ற விலைப்புள்ளிகளை விட குறைவாகவும் விலைப்புள்ளி அளித்துள்ள திரு.தியா சிவில் அசோசியேட், பொள்ளாச்சி அவர்களின் ரூ.67000/– **என்ற** விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் தனி அலுவலரின் அனுமதி பெற்று பணிகளை செய்ய மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மேற்காண் செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. இப்பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் மற்றும் பட்டியல் தொகை வழங்குவதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 5507/2021/இ1**

**3075)** பொள்ளாச்சி நகராட்சியில் அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையம், சுத்திகரிப்பு நிலையம், மார்க்கெட் ரோடு நீர் உந்து நிலையம், நகராட்சி பகுதிகளில் உள்ள 9 உயர்மட்ட நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் 2 தரைமட்ட நீர் தேக்க தொட்டிகள் ஆகியவற்றில் சுய உதவிக்குழு மூலம் பணியாட்களை அமர்த்துதல் பணிக்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.4.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு விலைப்புள்ளிகள் கோர தனி அலுவலரின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே உள்ளூரில் விலைப்புள்ளி கோரி இப்பணியை உடனடியாக செய்து முடிக்க வேண்டியுள்ளதால் 26.10.2021 அன்று உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | பெயர் | விலைப்புள்ளி தொகை ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு |
|---|---|---|
| 1 | வெண்ணிலா மகளிர் சுய உதவிக்குழு,<br>24, தெற்கு வீதி,<br>ஆலாங்கடவு,<br>திவான்சாபுதூர் ஊராட்சி,<br>பொள்ளாச்சி. | ரூ.577.00/- |
| 2 | மலர் சுய உதவிக் குழு,<br>தாட்கோ காலனி,<br>ஆச்சிபட்டி,<br>ஆ.சங்கபாளையம்,<br>பொள்ளாச்சி. | ரூ.605.00/- |
| 3 | நிலா மகளிர் சுய உதவிக்குழு,<br>வார்டு.24 கண்ணப்பன் நகர்,<br>பொள்ளாச்சி. | ரூ.610.00/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாகவும் மற்ற விலைப்புள்ளிகளை விட குறைவாகவும் விலைப்புள்ளி அளித்துள்ள **வெண்ணிலா மகளிர் சுய உதவிக்குழு, பொள்ளாச்சி** அவர்களின் ரூ.577.00/- **என்ற** விலைப்புள்ளியை ஏற்கவும் மற்றும் பணி உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.577.00/- **என விலைப்புள்ளி அளித்துள்ள வெண்ணிலா மகளிர் சுய உதவிக்குழு, பொள்ளாச்சி** அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**3076)** பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.28-ல் அமைந்துள்ள தெப்பக்குளத்தில் எடுக்கப்பட்ட நீர் மாதிரிகளை Physical, Chemical & Bacteriological Test (BOD, COD, DO, TDS, Turbidity NTO) பரிசோதனை செய்வதற்கு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் அவர்களுக்கான ஆய்வுக் கட்டணத் தொகை ரூ.6730/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.4557/2021/இ1.**

**3077)** பொள்ளாச்சி நகராட்சி வார்டு 36–க்குட்பட்ட பொட்டுமேடு பகுதியில் மின்வாரியத்தால் புதியதாக மின்மாற்றி நிறுவியதில், மேற்காண் பகுதியிலுள்ள தெருவிளக்குகளை ஒளிரவிட தமிழ்நாடு மின்வாரியத்தில் விண்ணப்பித்து தெருவிளக்கு புதிய மின் இணைப்பு (ஒரு முனை) பெறவும், இதற்காகும் கட்டணத் தொகை ரூ.2400/– யை செலுத்தும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தெருவிளக்குகள் ஒளிரவிடும் பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 4893/2021/இ1**

**3078)** பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 20, 33, அரிசந்திரர் வீதி மேற்குவாசல் விநாயகர் கோவில் என்ற முகவரியில் உள்ள குடிநீர் இணைப்பு எண். 076/020/00267 என்ற இணைப்பிற்கு உரிமையாளர் S.சிவக்குமார். மேற்காண் முகவரியில் குடிநீர் வைப்புத்தொகை ரூ.4340/– S.சிவக்குமார் மற்றும் கோகுலவாணி 33, அரிச்சந்திரர் வீதி வார்டு எண்.30 என்ற முகவரியில் குடிநீர் இணைப்பு எண்.076/020/00267 என்ற இணைப்பிற்கு ரூ.4340/– குடிநீர் வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. குடிநீர் இணைப்பு எண். 076/020/00267 என்ற இணைப்பிற்கு குடிநீர் வைப்புத் தொகை ரூ.4340/– வெவ்வேறு முகவரியில் இருமுறை செலுத்தப்பட்டுள்ளது. எனவே, குடிநீர் வைப்புத் தொகை ரூ.4340/– நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை நேர் செய்யப்பட்டு மீதமுள்ள தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்:2185/2021/இ3**

**3079)** பொள்ளாச்சி நகராட்சியில் JJM திட்டம் மற்றும் சாலைகளை UTIS மென்பொருளில் பதிவேற்றம் செய்ய Auto Cad மூலம் அனைத்து விவரங்களையும் வார்டு வாரியாக முழு ஒருங்கிணைந்த தொகுப்புகள், வரைபடங்கள் மற்றும் கலர் நகல்கள் மூன்று பிரதிகள் தயார் செய்தல் பணிக்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு நகராட்சி விதிகள் 1920 பிரிவு 15–ன் கீழ் மேற்கொள்ளவும் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே உள்ளூரில் விலைப்புள்ளி கோரி இப்பணியை உடனடியாக செய்து முடிக்க வேண்டியுள்ளதால் உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | திரு.S.ஜோதிராமலிங்கம் BE, MSC.,<br>24A, P.K.A காம்ப்ளக்ஸ்,<br>அங்காளம்மன் கோவில் எதிரில்,<br>பல்லடம். | ரூ.99600/– |
| 2 | திரு: M.லிங்கேஸ்வரன் BE.,<br>60, குறிஞ்சி நகர்,<br>மங்கலம் ரோடு,<br>பல்லடம். | ரூ.110600/– |
| 3 | திரு: A.கோபிகண்ணன் BE,<br>101, DMA நகர்,<br>பல்லடம், | ரூ.106600/– |

| | | |
|---|---|---|
| | திருப்பூர். | |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாகவும் மற்ற விலைப்புள்ளிகளை விட குறைவாகவும் விலைப்புள்ளி அளித்துள்ள திரு.S.ஜோதிராமலிங்கம், பல்லடம் அவர்களின் ரூ.99600/- **என்ற** விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் தனி அலுவலரின் அனுமதி பெற்று பணிகளை செய்ய மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மேற்காண் செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. இப்பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 5122/2021/இ1**

**3080)** பொள்ளாச்சி நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவில் மேற்கொள்ளும் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு வீடு வீடாக குப்பைகளை பெற்றிட 42 எண்ணம் பேட்டரி வாகனங்கள் **(Battery Operating Vehicle)** வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனை ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதில், பழுதான உதிரிபாகங்களை புதுப்பித்து இயக்க வேண்டியுள்ளது. இதற்கான உதிரிபாகங்களை கொள்முதல் செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.90 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணியினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி மேற்கொண்ட நடவடிக்கைகளக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 3664/2021/H2**

**3081)** பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதார பிரிவு Animal Birth Control திட்டத்திற்காக பயன்படும் வாகனம் TN 41 AJ 5965 வாகனத்திற்கு பேட்டரி புதிதாக மாற்றம் செய்ய நடைபெற்ற விலைப்புள்ளியில் கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

**விலைப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு:**

| வ.எண் | பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1. | என்.மகாலிங்கம் அன்ட் கம்பெனி<br>102, கோயம்புத்தூர் ரோடு<br>பொள்ளாச்சி. | ரூ.3920/- |
| 2. | கிரி பேட்டரீஸ், கோயம்புத்தூர் ரோடு<br>பொள்ளாச்சி | ரூ.4000/- |

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள என்.மகாலிங்கம் அன்ட் கம்பெனி, 102, கோயம்புத்தூர் ரோடு, பொள்ளாச்சி. நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1899/2021/எச்2**

**3082)** பொள்ளாச்சி நகர் மேற்கு பகுதிகளில் அடிக்கடி சாலைகள், கழிவுநீர் வடிகால், சிறுபாலம் மற்றும் குடிநீர் குழாய்களில் சீரமைக்கப்படும் பகுதிகளில் சிறு சிறு சேதங்கள் ஏற்படுகிறது. மேற்படி சேதங்களை சீரமைப்பது தொடர்பாக ஆணையர், பொறியாளர் மற்றும் பொதுமக்கள் அவர்களின் **Whatsapp** குழுமத்தின் மூலம் அனுப்பப்படும் செய்திகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார் மனுக்களில் உள்ள குறைபாடுகளை உடனுக்குடன் சீர்செய்து பணிகளை மேற்கொண்டு முடிப்பதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.**4.90** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணியின் மதிப்பீட்டுத் தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளுவதற்கும் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுப்பதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**3083)** பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.**13,** திலகர் வீதியில் கற்களால் அமைக்கப்பட்ட சிறுபாலம் பாசனம் சென்று சேதம் அடைந்துள்ளது. மேலும், இப்பகுதி வழியாக பொது மக்கள் இருசக்கர வாகனம் மற்றும் இதர வாகனங்கள் செல்ல முடியாத சூழல் உள்ளதால் உடன் இச்சிறுபாலத்தை புதியதாக அமைக்க ஆணையர் அவர்கள் **Whatsapp** குழுமத்தில் பதிவிட்டுள்ளார்கள். எனவே, சிறுபாலத்தினை புதிதாக அமைப்பதற்கு ரூ.**1.60** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணியின் மதிப்பீட்டுத் தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளுவதற்கும் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுப்பதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**3084)** பொள்ளாச்சி நகராட்சி பகுதிகளில் உள்ள உள்ள மழைநீர் வழிந்தோடும் கால்வாய்கள், கல்வெட்டுகள், நீர்வழித்தடங்கள் தூர்வாரும் பொருட்டு வாடகை வாகனம் இயக்குதல் பணிக்கு ரூ14,00,000/- மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. பணியின் அவசர அவசியம் கருதி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி 16.09.2021 - ஆம் தேதி விலைப்புள்ளி கோரி 17.09.2021 அன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

**<u>விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு:-</u>**

| வ.எண் | விபரம் | மாரியம்மாள் எர்த் மூவர்ஸ், பொள்ளாச்சி | காளியம்மாள் எர்த் மூவர்ஸ், மண்ணூர், பொள்ளாச்சி |
|---|---|---|---|
| 1 | ஜேசிபி (JCB) | ரூ.950 /- | 1000 /- |
| 2 | டிப்பர் (TIPPER) | 8000 /- | 9000 /- |
| 3 | கிட்டாச்சி (HITACHI) | 2000 /- | 2,200 /- |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய **மாரியம்மாள் எர்த்**

**மூவர்ஸ், பொள்ளாச்சி** அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணிகளின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் தனி அலுவலரின் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண்– 4359/2021/எச்2**

**3085)** பொள்ளாச்சி நகராட்சி பகுதியில் கொரோனா நோய் தடுப்பு பணிக்காக பொது மக்களிடம் தினசரி சளி மாதிரியாக தோராயமாக 300 நபர்களிடம் எடுக்கப்பட்டு மாதிரி எடுக்கப்பட்டவரின் விவரம் அதற்கென படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பப்படுகிறது. இப்படிவம் தற்பொழுது மிகக் குறைவாக உள்ளதாலும், தற்பொழுது கோவை மாவட்டத்தில் கொரோனா தொற்று அதிகமாக உள்ளதாலும் தினசரி சளி மாதிரி 400 மேல் எடுக்க வேண்டியுள்ளதாலும் SWAB TEST APPLICATION FORM –10,000 எண்ணிக்கையில் (DOUBLE SIDE PRINTED IN A4 SIZE) அச்சடித்து வாங்கி வழங்கும் பணிக்கு 12.09.2021 அன்று உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

**<u>பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரம்</u>**

| வ. எண் | விலைப்புள்ளி வழங்கிய அச்சகங்களின் பெயர் | மதிப்பு (10,000 படிவங்களுக்கு) |
|---|---|---|
| 1. | நவீன் கிராபிக்ஸ்<br>21, தென்றல் நகர், சூளேஸ்வரன்பட்டி,<br>பொள்ளாச்சி | ரூ.25500/- |
| 2. | செந்தில் அச்சகம்,<br>பல்லடம் ரோடு,<br>பொள்ளாச்சி | ரூ.28000/- |
| 3. | ஸ்ரீ விநாயகா பிரிண்டர்ஸ்<br>43/70, பாலகோபாலபுரம் வீதி,<br>பொள்ளாச்சி | ரூ.22500/- |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஸ்ரீ விநாயகா பிரிண்டர்ஸ் அச்சகத்திற்கு SWAB TEST APPLICATION FORM –10,000 எண்ணிக்கை அச்சடித்து வழங்க பொது சுகாதாரப் பணியின் அவசியம் கருதியும் 1920ம் வருடத்தன் மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு(15)ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**3086)** பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் தூய்மை பணியாளர் திருமதி.மாரியம்மாள்/கிருஷ்ணமூர்த்தி என்பவர் தாராபுரம் நகராட்சியில் பணிபுரிந்த காலத்தில் தாராபுரம் பொதுப் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் சங்கத்திடம் இருந்து பெற்ற கடன் தொகையினை திருப்பி செலுத்தாதால் தலைவர் தாராபுரம் பொதுப் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் சங்கம் மூலமாக சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண்.20692/2021–ல் வழக்கு தொடரப்பட்டுள்ளது. எனவே இவ்வழக்கிற்கு பொள்ளாச்சி நகராட்சி சார்பில் ஆஜராக சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு.பி.ஆனந்த் அவர்களை, நியமிக்கவும் மேலும் இவ்வழக்கிற்காக ஏற்படும் அனைத்து செலவுகளுக்கும் நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகுறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 04686/2021/எச்1**

| | |
|---|---|
| 3087) | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட நாச்சிமுத்து பிரசவ விடுதி வளாகத்தில் மாபெரும் கோவிட்–19 தடுப்பூசி முகாம் 19.09.2021 அன்று நடைபெற்றதற்கு மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் விழாவினை துவக்கி வைத்திடவும் விழாவிற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளவும், தடுப்பூசி முகாமில் அரங்கம் மற்றும் வளாக பகுதியில் தடுப்பூசி குறித்த பிளாக்ஸ் பேனர்கள் வைக்கவும் தடுப்பூசி போட்டு கொண்டபின் கடைபிடிக்க வேண்டிய முறைகள், வாகனத்தின் முகப்பில் தடுப்பூசி முகாம் குறித்த அறிவிப்பு அமைத்தும், தேவையான IEC பேனர்கள் மற்றும் பிளாக்ஸ்கள் அமைக்கப்பட்டது. தடுப்பூசி பணியின் அவசர அவசரம் கருதி பேனர்கள் மற்றும் பிளக்ஸ்கள் உள்ளூர் அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டதற்கு செலவினம் ரூ.12240/– துப்புரவு ஆய்வாளர் திரு.சிவக்குமார் என்பவரால் மேற்கொள்ளப்பட்டது. அன்னாருக்கு தொகையினை வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:–</u>**<br>1. கொரோனா தடுப்பூசியின் அவசரம் அவசியம் கருதி செலவு மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.05309/2021/எச்1** |
| 3088) | பொள்ளாச்சிநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் (நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20980/2021/எச்2 நாள்.16.09.2021–ன்படி) மாபெரும் தூய்மைப் பணி முகாம் மெகாகால்வாய்கள் மற்றும் மழைநீர் வடிகால் தூய்மைப்படுத்தும் முகாம் நடைபெற அறிவுறுத்தப்பட்டதன்படி 20.09.2021 முதல் 25.09.2021 வரை காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையில் தூய்மை பணி JCB, HITACHI –யில் பேனர்கள் கட்டி தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.அவசரம் அவசியம் கருதி பேனர்கள் உள்ளூர் டிஜிட்டல் பேனர் கடையில் 6x4= 40 எண்ணிக்கையில் அச்சடித்து வாங்கப்பட்டு உபயோக்கப்படுத்தப்பட்டது. தூய்மைப்பணிகள்மேற் கொண்டமைக்காகவும் துய்மைப் பணி மேற்கொள்ளப்பட்டதை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதை புகைப்படம் எடுக்கப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. அதற்கான மொத்த செலவுத்தொகை ரூ25950/– (பிளக்ஸ் ரூ19200+ போட்டோரூ6750) திரு.சிவக்குமார் துப்புரவு ஆய்வாளரால் செலவு மேற்கொள்ளப்பட்டதை அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:–</u>**<br>நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மாபெரும் தூய்மைப் பணி 20.09.2021 முதல் 25.09.2021 வரை காலை 6 மணிமுதல் மாலை 6மணி வரை நடைபெற்றது அவசரம் அவசியம் கருதி செலவு மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.05308/2021/எச்1** |
| 3089) | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட, மகாலிங்கபுரம் மனைப்பிரிவில் அமைந்துள்ள காமராஜர் வீதி, நேரு வீதி, ரவுண்ட் ரோடு, பாரதி வீதி, தாகூர் வீதி மற்றும் புதிய திட்ட சாலை ஆகிய இடங்களில் உள்ள வணிக கட்டிடங்கள் தொடர்பாக வாதி திரு.ஜெ.கிருஷ்ணகுமார் என்பவரால், மாண்பமை, சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு WP.No.3995/2019 மற்றும் Contempt Petition No 22/2021ல் நகராட்சி ஆணையர் அவக்ளை 3ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டது. மேற்படி வழக்கில் மாண்பமை, சென்னை உயர்நீதிமன்ற 08.09.2021ம் தேதியன்று வழங்கப்பட்ட உத்தரவின்படி Advocate Commissioner திரு.A.V.ஆறுமுகம் அவர்களுக்கு கூடுதல் ஊதியத் தொகை ரூ.50,000/– வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி தொகையினை திரு.A.V.ஆறுமுகம் அவர்களுக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**ந.க.எண்.3272/2019/ஜி1** |

| | |
|---|---|
| 3090) | பொள்ளாச்சி நகராட்சியில் 2021–2022ஆம் நிதியாண்டிற்கான ஒப்பந்த வேலைகளுக்கு வழங்கப்பட்ட பட்டியல்களில் பிடித்தம் செய்து செலுத்தப்பட்ட வருமானவரித் தொகைகள் மற்றும் இந்நகராட்சியில் பணிபுரியும் அலுவலர் மற்றும் பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்து செலுத்தப்பட்ட வருமானவரித் தொகைகள் ஆகியவைகளின் படிவம் 26Q மற்றும் 24Q ன் மூலம் கணினியில் கணக்குகள் மற்றும் ஃபைலிங் செய்த வகையில் அங்கீகரிக்கப்பட்ட தணிக்கை R.விஜயலட்சுமி, பொள்ளாச்சி அவர்களுக்கு வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக்க் குறிப்பு:</u>**<br>1. அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.0747/2021/பி5** |
| 3091) | பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பைகளை சேகரம் செய்து அகற்றப்படும் பணிகளுக்கு வாகனங்களை இயக்க ஓட்டுநர்கள் பற்றாக்குறை உள்ளதால் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிக ஓட்டுநர்களைக் கொண்டு பணிமேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தும் பொருட்டு கடந்த 05.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு திருவாளர் சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீஸ் என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு 31.10.2021 உடன் நிறைவடைய உள்ளது.<br>தற்போது தமிழகத்தில் கொரோனா தொற்று பாதிப்பு தடுக்கும் பொருட்டு தமிழக அரசு தளர்த்தப்பட்ட ஊரடங்கு பிறப்பித்து கொரோனா தொற்று கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடமிருந்து வெளிக்கொணர்வு பணியாளர்கள் குறித்து கருத்து கேட்டு, இந்நகராட்சியிலிருந்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. எனவே நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடமிருந்து வழிகாட்டு நெறிமுறைகள் குறித்து கருத்துரு பெற்று, 01.11.2021 முதல் புதிய ஒப்பந்தம் கோரப்பட்டு பணிகள் முடிவடையும் வரையில் தற்போது உள்ள சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீஸ் நிறுவனத்தின் ஒப்பந்தத்தினை பணி நீட்டிப்பு செய்யவும் பணி நீட்டிப்பு காலத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில் தற்காலிக ஓட்டுநர்களின் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி முன் அறுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.567/2017/எச்2** |
| 3092) | காந்தி வாரச்சந்தை 'சி' பிளாக் பகுதியில் 13x22 அளவுள்ள நிரந்தரமற்ற மேற்கூரை கொண்ட கடை சுங்க இனத்தில் உள்ளதாகவும் இவ்விடத்தில் அவ்வபோது ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு வருகிறது என்பதாலும் நகராட்சியின் வருவாயினை பெறுக்கும் நோக்கிலும் தொடர்ந்து ஆக்கிரமிப்பு மேற்கொள்ளாமல் இருக்கும் பொருட்டும் 286 சதுரடி பரப்பளவு கொண்ட நிரந்தரமற்ற மேற்கூரை கொண்ட கடையினை பொது ஏலம் கோர சந்தை கண்காணிப்பாளரால் 22.10.2021ல் குறிப்பு வழங்கப்பட்டுள்ளதன்படி இக்கடையினை பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரவும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி செய்தித்தாளில் வெளியிடவும் அதற்கான அனைத்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1. வைப்புத் தொகை ரூ.1,00,000/– மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.1,50,000/– ஆக நிர்ணயம் செய்யலாம். |

| | |
|---|---|
| | 2. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்:5035/2020/அ6** |
| **3093)** | நகராட்சிக்கு சொந்தமான காந்தி மார்க்கெட் மொத்த வியாபார கடை எண்.36 திரு.முத்துச்சாமி என்பவருக்கு டிசம்பர் 2017 முதல் நவம்பர் 2020 வரையிலான காலத்திற்கு மாதவாடகை தொகை ரூ.6200/-க்கு குத்தகைக்கு விடப்பட்டு மூன்றாண்டு காலம் முடிவுற்ற நிலையில் 01.12.2020 முதல் 30.11.2023 வரையிலான காலத்திற்கு 15% வாடகை உயர்வு செய்து உரிமம் புதுப்பித்து வழங்கப்பட்டுள்ளதில் குத்தகைதாரரால் கொரனா நோய் தொற்று காலத்தில் கடையினை தொடர்ந்து நடத்திட இயலாத காரணத்தால் என்பதால் கடையினை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாகவும் குத்தகைதாரர் திரு.முத்துசாமி என்பவர் விண்ணப்பித்துள்ளார் மேற்காண் கடையினை 24.09.2021ல் பூட்டி நகராட்சி வசம் பொறுப்பேற்கப்பட்டுள்ளதாக சந்தை கண்காணிப்பாளரால் 29.09.2021ல் குறிப்பு வழங்கப்பட்டுள்ளதன்படி இக் கடையின் குத்தகை உரிமத்தினை 01.10.2021 முதல் ரத்து செய்து ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரவும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி செய்திதாளில் வெளியிடவும் அதற்கான அனைத்து செலவினங்கள் மேற்கொள்ள மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>1. குத்தகைதாரரால் செலுத்தப்பட வேண்டிய வாடகை நிலுவை தொகை ரூ.50,478/-ஐ அன்னார் செலுத்தியுள்ள வைப்புத்தொகையில் இருந்து ஈடு செய்து மீத வைப்புத்தொகையினை பறிமுதல் செய்து நடவடிக்கை கொள்ளலாம்.<br>2. மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்:1131/2020/அ6** |
| **3094)** | நகராட்சிக்கு சொந்தமான அண்ணா கூடுதல் பேருந்து நிலையத்தில் உள்ள உணவக கடை திரு.ராஜேந்திரபூபதி என்பவருக்கு 01.11.2018 முதல் 31.10.2021 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. (வரிவதிப்பு எண்:076/BD01/00186).<br><br>கொரனா நோய் தொற்று காரணமாக தொடர்ந்து கடையினை நடத்திட இயலாத காரணத்தால் தனக்கு உரிமம் புதுப்பித்து வழங்க வேண்டாம் என தெரிவித்து விண்ணப்பித்துள்ளதால் இக் கடையின் குத்தகை உரிமத்தினை 01.11.2021 முதல் ரத்து செய்து ஏல நடவடிக்கை மேற்கொள்ள சந்தை கண்காணிப்பாளரால் 29.09.2021ல் குறிப்பு வழங்கப்பட்டுள்ளதன்படி இக்கடையின் குத்தகை உரிமத்தினை 01.11.2021 முதல் ரத்து செய்து ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரவும், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி செய்திதாளில் வெளியிடவும் அதற்கான அனைத்து செலவினங்கள் மேற்கொள்ள மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந..க.எண்:1131/2020/அ6** |
| **3095)** | நகராட்சிக்கு சொந்தமான அண்ணா கூடுதல் பேருந்து நிலையம் கடை எண்.4 (வரி வரிப்பு எண்:076/BD01/00179) திரு.பாலசுப்பிரமணியம் என்பவருக்கு 01.11.2018 முதல் 31.10.2021 வரையிலான காலத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டு கொரனா நோய் தொற்று காரணமாக தொடர்ந்து கடையினை நடத்திட இயலாத காரணத்தால் 01.11.2021 முதல் குத்தகை உரிமம் புதுப்பிக்க வேண்டாம் என தெரிவித்து விண்ணப்பித்துள்ளார்.<br><br>மேற்காண் கடையின் குத்தகை உரிமத்தினை 01.11.2021 முதல் ரத்து செய்து ஏல நடவடிக்கை மேற்கொள்ள சந்தை கண்காணிப்பாளரால் 07.10.2021ல் குறிப்பு வழங்கப்பட்டுள்ளதன் படி இக் கடையின் குத்தகை உரிமத்தினை 01.11.2021 முதல் ரத்து செய்து ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரவும், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி செய்திதாளில் வெளியிடவும் அதற்கான அனைத்து |

| | |
|---|---|
| | செலவினங்கள் மேற்கொள்ள மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்:1131/2020/அ6** |
| **3096)** | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 09 ஸ்ரீ ராஜராஜேஸ்வரி நகர் பகுதி அருகில் அமைந்துள்ள "அஸ்வின் அவென்யூ" பகுதியானது நகரளவு வார்டு H பிளாக் எண் 04 நகரளவு எண்கள். 16/2B பகுதியில் நகர் ஊரமைப்பு துறை ந.ஊ.து.இ எண்.4056/2019–ல் கோ.மா. நாள் 22.10.2020–ல் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு நகராட்சியின் மூலம் இறுதி ஒப்புதல் 6157/2018/ஜி1 நாள்.26.02.2021ல் வழங்கப்பட்டுள்ளதாக நகரமைப்பு ஆய்வரால் குறிப்பு வழங்கப்பட்டுள்ளது. வருவாய் ஆய்வாளர் குறிப்பில், 'அஸ்வின் அவென்யூ' பகுதியானது "சி" மண்டலத்தில் அமைந்துள்ளதாகவும், அப்பகுதி ஸ்ரீ ராஜராஜேஸ்வரி நகர் பகுதி அருகில் அமைந்துள்ளதால் இப்பகுதியையும் **"சி"** மண்டலத்தில் நிர்ணயம் செய்து வார்டு எண் 09 "அஸ்வின் அவென்யூ" என்ற பெயரை கணினியில் ஏற்றம் செய்திட மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.2754/2021/அ2** |
| **3097** | பொள்ளாச்சி நகர் மேற்கு பகுதிகளில் அடிக்கடி சாலைகள், கழிவுநீர் வடிகால், சிறுபாலம் மற்றும் குடிநீர் குழாய்களில் சீரமைக்கப்படும் பகுதிகளில் சிறு சிறு சேதங்கள் ஏற்படுகிறது. மேற்படி சேதங்களை சீரமைப்பது தொடர்பாக ஆணையர், பொறியாளர் மற்றும் பொதுமக்கள் அவர்களின் **Whatsapp** குழுமத்தின் மூலம் அனுப்பப்படும் செய்திகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார் மனுக்களில் உள்ள குறைபாடுகளை உடனுக்குடன் சீர்செய்து பணிகளை மேற்கொண்டு முடிப்பதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.**4.90** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>**1.** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**2.** மேற்காணும் பணியின் மதிப்பீட்டுத் தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளுவதற்கும் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுப்பதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம். |
| **3098** | பொள்ளாச்சி நகராட்சியின் மேற்கு பகுதியில் உள்ள **18** வார்டுகளில் குடிநீர் விநியோகம் செய்யப்படும் குடிநீர் குழாய்களில் ஏற்படும் குடிநீர் கசிவுகளையும், குடிநீர் விநியோகம் செய்ய பயன்படும் மதகுகளில் (வால்வு) ஏற்படும் கசிவுகளையும், பொதுக் குழாய்களில் ஏற்படும் கசிவுகளையும், குடிநீர் குழாய்களில் ஏற்படும் அடைப்புகள், மற்றும் கிணற்று நீர் குழாய்களில் ஏற்படும் கசிவுகளையும் முறையே பராமரிப்பு செய்ய வேண்டியுள்ளது, மேலும் அவ்வப்பொழுது குடிநீர் குழாய் உடைப்பு சரி செய்தல் மற்றும் அடைப்புகள் ஆகியவற்றை சரி செய்து பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளதாலும், குடிநீர் அத்தியாவசிய பணியான இப்பணியை மேற்கொள்ள ரூ.**4.80** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்<br>**2.** பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்<br>**3.** இப்பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம். |

**3099** பொள்ளாச்சி நகராட்சியின் கிழக்கு பகுதியில் உள்ள 18 வார்டுகளில் குடிநீர் விநியோகம் செய்யப்படும் குடிநீர் குழாய்களில் ஏற்படும் குடிநீர் கசிவுகளையும், குடிநீர் விநியோகம் செய்ய பயன்படும் மதகுகளில் (வால்வு) ஏற்படும் கசிவுகளையும், பொதுக் குழாய்களில் ஏற்படும் கசிவுகளையும், குடிநீர் குழாய்களில் ஏற்படும் அடைப்புகள், மற்றும் கிணற்று நீர் குழாய்களில் ஏற்படும் கசிவுகளையும் முறையே பராமரிப்பு செய்ய வேண்டியுள்ளது, மேலும் அவ்வப்பொழுது குடிநீர் குழாய் உடைப்பு சரி செய்தல் மற்றும் அடைப்புகள் ஆகியவற்றை சரி செய்து பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளதாலும், குடிநீர் அத்தியாவசிய பணியான இப்பணியை மேற்கொள்ள ரூ.4.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்
3. இப்பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**3100** பொள்ளாச்சி நகர பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தடையின்றி விநியோகம் செய்ய ஏதுவாக நகராட்சியில் கீழ்கண்ட இடங்களில் அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையம் சுத்திகரிப்பு நிலையம் மார்கெட்ரோடு நீர் உந்து நிலையம் மற்றும் நகராட்சி பகுதிகளில் உள்ள 9 உயர்மட்ட நீர் தேக்க தொட்டிகள் மற்றும் 2 தரைமட்ட நீர் தேக்க தொட்டிகள் ஆகியவற்றில் நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் கீழ்ககண்டவாறு Outsourcing முறையில் பணியாட்கள் அமர்த்தி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்து வரப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையம் | – | 3 நபர்கள் |
| 2. | மார்க்ட் ரோடு பூஸ்டர் | – | 3 நபர்கள் |
| 3. | வெங்கடேசா காலனி OHT | – | 3 நபர்கள் |
| 4. | மகாலிங்கபுரம் OHT | – | 3 நபர்கள் |
| 5. | சுதர்சன் நகர் OHT | – | 3 நபர்கள் |
| 6. | கே.ஆர்,ஜி,பி நகர் OHT | – | 3 நபர்கள் |
| 7. | VKV லே அவுட் OHT | – | 2 நபர்கள் |
| 8. | KC பார்க் OHT | – | 3 நபர்கள் |
| 9. | சோமசுந்தரம் லே அவுட் OHT | – | 2 நபர்கள் |
| 10. | ஜோதி நகர் OHT | – | 3 நபர்கள் |

மேற்கண்ட பணியாட்களுக்கு Outsourcing முறையில் மூன்றாண்டுகளுக்கு பணியமர்த்திட நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதலின்படி ந.க.எண்.21787/2021/EA2 நாள்.02.10.2021–ன் படி நடவடிக்கைகள் மேற்கொள்ள கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளது. உரிய அனுமதி பெறப்படும் வரை அத்தியாவசிய குடிநீர் பணிகள் தடையின்றி நடைபெற வேண்டியுள்ளதால், மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்வதை தவிர்த்து, மேற்கண்ட பணியை சுயஉதவிக் குழு மூலம் நவம்பர் மாதத்திற்கு, மேற்கண்ட பணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர், கோவை அவர்களின் ஆங்கீகரிக்கப்பட்ட விலைப்புள்ளிகளின் படி கூலி, EPF, ESI, Insurance தொகையுடன் சம்பளம் வழுங்கவும், இதற்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4.90 இலட்சம் ஆகும். மேற்காண் தொகையினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் இப்பணியினை சுய உதவிக்குழுவின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| | 2. இப்பணி குடிநீர் அத்தியாவசிய பணியாக இருப்பதால், பணியின் அவசர அவசியம் கருதி சுய உதவிக் குழுவின் மூலம் பணி மேற்கோள்ள விலைப்புள்ளிகள் பெற்று மேல் நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>4. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம். |
| **3101** | பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் விநியோகத்தில் தலைமை நீரேற்று நிலையம், நீர் உந்து நிலையம் அனைத்து குடிநீர் மேல் நிலை தொட்டிகள், தரைமட்ட தொட்டிகள் மற்றும் பகிர்மான குழாய்களின் இறுதி பகுதியில் குடிநீரின் மாதிரிகள் சேகரம் செய்து, ஆய்வு செய்ய **2021 மற்றும் 2022-ம்** ஆணடுகளுக்கு பரிசோதனை செய்ய ஆகும் உத்தேச ஆய்வு கட்டணம் ரூ.**2.00 இலட்சத்திற்கு** மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.4079/2021/இ2** |
| **3102)** | நகராட்சிக்கு சொந்தமான காந்தி மார்க்கெட் 1 முதல் 12 பிரிவில் உள்ள நகர் மன்ற கடைகளிலும் மற்றும் காலியிடங்கலும் கடை வைத்து வியாபாரம் செய்யும் வியாபாரிகளிடம் சந்தை நாட்களில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 15.10.2018 முதல் 31.10.2021 வரை 3 ஆண்டு காலத்திற்கு திரு.அக்பர்அலி என்பவருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது தற்போது 31.12.2020 முதல் 12 முறைக்கு மேல் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும். ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை. தற்போது 31.10.2021ல் குத்தகை காலம் முடிவடைகிறது.<br>கோவிட் நோய் தொற்று காரணமாக சந்தையில் பல கடைகள் செயல்படாமல் உள்ளதால் 01.11.2021 முதல் துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளும் பட்சம் குத்தகைதாரரால் செலுத்தப்படும் மாத தொகை ரூ.1,90,731/- ஆனது வசூல் செய்ய இயலாத சூழல் ஏற்படும் என்பதால் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படும்.<br>நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாததாலும் குத்ததைதாரரால் செலுத்தப்பட்டு வரும் மாத குத்தகை தொகை ரூ.1,90,731/-ல் 5% உயர்வு செய்து குத்தகை தொகை ரூ.2,00,286/- ஆக நிர்ணயம் செய்து குத்தகைதாரர் திரு.அக்பர் அலி என்பவருக்கு 1 மாத காலம் மட்டும் குத்தகை உரிமம் நீட்டிப்பு செய்து வழங்கிட சந்தை கண்காணிப்பாளரால் 22.10.2021ல் குறிப்பு வழங்கப்பட்டுள்ளதன் படி நவம்பர் 2021ம் மாதத்திற்கு மட்டும் உரிமம் நீட்டிப்பு செய்து குத்தகை தொகை ரூ.2,00,286/-க்கு குத்தகைதாரர் திரு.அக்பர் அலி என்பவருக்கு வழங்கிட மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**<u>ந.க.எண்:5035/2020/அ6</u>** |
| **3103)** | நகராட்சிக்கு சொந்தமான அண்ணா மத்திய பேருந்து நிலைய கடை எண்:26க்கு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி 16.02.2021ல் நடைபெற்றதில் திருமதி.வள்ளியம்மாள் என்பவரின் மாத வாடகை தொகை ரூ.19,100/-க்கான ஒப்பந்தப்புள்ளி நகர் மன்ற தீர்மானம் எண்:2841 நாள்:26.02.2021ன் வாயிலாக ஏற்கப்பட்டு இவ்வலுவலக செயல் முறை ஆணை ந.க.எண்:1131/2020/அ6 நாள்:28.04.2021ன் படி 01.05.2021 முதல் 30.04.2024 வரையிலான காலத்தற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.<br>இக் கடையானது ஐந்து ஆண்டுகளுக்கு மேலான ஏலம் போகாமல் இருந்துள்ளதால் கடையின் மின் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டு மின் இணைப்பு இல்லாமல் இருந்துள்ளது. தற்போது ஏலம் போன நிலையில் மின் இணைப்பு இல்லாமல் கடையானது குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதால் |

| | |
|---|---|
| | 01.05.2021 முதல் 30.09.2021 வரையிலான காலத்திற்கு வாடகை தள்ளுபடி செய்து வழங்க கோரி குத்தகைதாரர் திருமதி.வள்ளியம்மாள் என்பவரால் 25.08.2021ல் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.<br>மேற்காண் கடைக்கு நகராட்சி பொறியல் பிரிவின் மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டு 13.10.2021ல் இக்கடைக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ள ஏற்கனவே 01.05.2021 முதல் 30.04.2024 வரையிலான காலத்திற்கு வழங்கப்பட்டுள்ளதால் குத்தகை உரிமத்தினை ரத்து செய்து 01.10.2021 முதல் 30.09.2024 வரையிலான காலத்திற்கு உரிமம் வழங்கிட 22.10.2021ல் சந்தை கண்காணிப்பாளரால் குறிப்பு வழங்கப்பட்டுள்ளதன் படி வரிவதிப்பு எண்:076/BD01/00237ல் 01.05.2021 முதல் ஏற்றம் செய்யப்பட்ட கேட்பினை ரத்து செய்து 01.10.2021 முதல் கணினியில் கேட்பு ஏற்றம் செய்திட மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்: 1131/2020/அ6** |
| **3104)** | நகராட்சிக்கு சொந்தமான சமத்தூர் இராமஜயங்கார் ஆண்கள் மேல் நிலைப்பள்ளி மைதானத்தில் சறுக்கு விளையாட்டு திடல் உரிமம் (Skating) 22.10.2021ல் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது.<br><br>**வ.எண்** \| **பெயர்/முகவரி** \| **ஆண்டு குத்தகை**<br>1. \| திரு.சந்திரசேகரன், செயலாளர், பொள்ளாச்சி டிவிசனல் ரோலர் ஸ்கேட்டிங் அசோசியேசன் 1,வி.கே.வி.லே அவுட், பொள்ளாச்சி \| 26,000/-<br><br>மேற்காண் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1. மேற்காண் குத்தகை இனத்திற்கு இரண்டு முறை ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே வரப்பெற்றுள்ளது. சறுக்கு மைதானம் கட்டி முடிக்கப்பட்டு 6 மாதங்கள் பயன்படுத்தாமல் இருப்பதாலும், தொடர் மழையினாலும் மைதானம் பயன்படுத்த இயலாத சூழ்நிலை ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும், பள்ளி குழந்தைகளை சறுக்கு விளையாட்டில் ஊக்குவிக்கும் விதமாக சறுக்கு மைதானத்தினை பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளதாலும் வரப்பெற்ற திரு.சந்திரசேகரன் என்பவரின் ஆண்டு குத்தகை தொகை ரூ.26,000/-க்கான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>**<u>ந.க.எண்:1888/2021/அ6</u>** |
| **3105)** | இந்நகராட்சிக்குட்பட்ட காந்தி மார்க்கெட் பகுதியில் உள்ள சில்லறை வியாபாரக் கடை எண்.55ன் உரிமதாரர் திரு.பி.எம்.ரவிக்குமார் தன்னால் கடை நடந்த இயலவில்லை என தெரிவித்து தான் செலுத்திய வைப்புத் தொகையை திருப்பி வழங்கிட கோரி விண்ணப்பித்துள்ளார். அன்னாரின் வைப்புத் தொகை காலங்கடந்த வைப்பு நிதிக் கணக்கில் ரூ.151090/- உள்ளது. இதில் தணிக்கை தடைக்காக 3 மாத வாடகைத் தொகை ரூ.16665/-ஐ பிடித்தம் செய்து கொண்டு மீதித் தொகை ரூ.134425/-ஐ திரு.பி.எம்.ரவிக்குமார் என்பவருக்கு திருப்பி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>ந.க.எண்.3073/2021/பி4</u>** |